Deccan Chronicle
Dated: 21.02.2025


# Trump alleges US interference in Indian elections through USAID

## I guess they were trying to get someone else elected, says US Prez

SRIDHAR KUMARASWAMI | DC
NEW DELHI, FEB. 20

**TRUMP QUESTIONS** $21 million in financial aid for "voter turnout" in India during the Biden administration

The deep state had a clear objective to destabilise India by targeting Mr Modi, alleges the BJP.



The US Agency for International Development (USAID) is the "principal US agency to extend assistance to countries recovering from disaster, trying to escape poverty and engaging in democratic reforms".

Questioning $21 million in financial aid for "voter turnout" in India during the Biden administration, US President Donald Trump on Thursday indicated that this may have been an attempt at regime change in India and interference in the Indian poll process and that the US will have to inform India officially about this.

"Why do we need to spend $21 million for voter turnout in India? ... I guess they were trying to get someone else elected. We ought to tell the Indian government because when we heard that Russia spent $2,000 in our country, it was a big deal. They (Russia) took some Internet ads for $2,000. This is a total breakthrough. $21 million for India elections," the US President said at an event.

The US Agency for International Development (USAID) is the "principal US agency to extend assistance to countries recovering from disaster, trying to escape poverty and engaging in democratic reforms". The Trump Administration has now cancelled the allocation.

Last December, soon after the defeat of the Democrats in the US elections, the ruling BJP on the social media platform X had claimed that organisations funded by the US state department and the US "deep state" were targeting the image of Prime Minister Narendra Modi and India.

The BJP posted on X: "French investigative media group Mediapart revealed that the Organised Crime and Corruption Reporting Project (OCCRP) is funded by the US state department's USAID, as well as other deep state figures like George Soros and the Rockefeller Foundation. In fact, 50 per cent of OCCRP's funding comes directly from the US state department. OCCRP, therefore, functions as a media tool for carrying out deep state agendas." ■ P7

## BRING OUT WHITE PAPER ON USAID, CONGRESS TELLS GOVT

**New Delhi, Feb. 20:** Amid a row over alleged funding by USAID for raising voter turnout in India, the Congress on Thursday demanded that the Indian government bring out a white paper on the US agency's support to both governmental and non-governmental institutions in India over the decades.

The Congress also dubbed US President Donald Trump's claims related to USAID as "nonsensical".

The party's assertion comes after Mr Trump questioned the purpose of providing $21 million to India for "voter turnout".

In a post on X, Congress general secretary in-charge communications Jairam Ramesh said, "USAID is very much in the news these days. It was set up on November 3, 1961. Claims being made by the US President are typically nonsensical to say the least." "Even so, the government of India should bring out a white paper at the earliest detailing USAID's support to both governmental and non-governmental institutions in India over the decades," the Congress leader said.

On February 16, the Department of Government Efficiency (DOGE), led by billionaire SpaceX CEO Musk, listed items on which the "US taxpayer dollars were going to be spent" and the list included "USD 21M for voter turnout in India". ■ P7


# Trump alleges US interference in Indian elections through USAID


FROM PG 1

"The deep state had a clear objective to destabilise India by targeting Mr Modi. To achieve this, they turned to OCCRP, instructing the organisation to provide material aimed at damaging Mr Modi's and India's image. The (main Opposition party) Congress then exploited this material to launch attacks on Mr Modi, propagate false narratives and disrupt the functioning of Parliament. The US deep state was always working behind the scenes... The deep state is an evil force that has brought nothing but destruction," the BJP post said.

The US embassy, under then ambassador Eric Garcetti, had described the allegations as "disappointing".

"It's disappointing that the ruling party in India would make these kinds of accusations. The US government works with independent organisations on programming that supports professional development and capacity building training for journalists. This programming does not influence the editorial decisions or direction of these organisations. The United States has long been a champion of media freedom around the world. A free and independent press is an essential component in any democracy, enabling informed and constructive debate and holding those in power accountable," the US embassy reacted.

Mr Garcetti, being a political appointee of the previous Biden administration, demitted office on January 20 when the Trump administration assumed office.

It is not a secret that ties between India and the US under the Biden administration had soured considerably in the last one-and-a-half years of the previous administration's term due to several factors, including India's continued friendship with time-tested friend Russia and also over a foiled plot to kill pro-Khalistan extremist and US citizen Gurpatwant Singh Pannun in New York in 2023, in which the US alleged that a (now erstwhile) Indian government employee was involved. The Biden administration had also sharply and directly criticised India on the religious freedoms' issue.

Bangladesh's former prime minister Sheikh Hasina, who was ousted from power in August last year, also made similar allegations against the US. She alleged that the US (under the previous Biden administration) played a major role in her ouster from power following violent student protests.

The US had subsequently dismissed these reports as untrue. The previous Biden administration had frosty ties with Ms Hasina and was seen as very close to the current interim government in Bangladesh led by Nobel laureate Muhammad Yunus.

The Times of India

Dated: 21.09.2025

# EPS: EC has no jurisdiction in internal affairs of AIADMK

## 'Petitioners Are Not Party Cadre, Only Want To Agitate AIADMK'

**A March 2024 order of the civil court restrained O Panneerselvam from using the two leaves symbol, a decision upheld by the high court's division bench and later Supreme Court**

Julie.Mariappan
@timesofindia.com

**Chennai:** AIADMK general secretary **Edappadi K Palaniswami** has filed separate responses to the Election Commission of India, saying the body lacked jurisdiction in the internal affairs of AIADMK. "Disgruntlement of a few anti-party elements cannot knock on this commission through any back door. Their grievances, if any, can be taken up only by civil courts and not by the commission," Palaniswami said.



His latest responses came a week after Madras high court vacated the stay on the proceedings of ECI based on representations of seven people including P Ravindhranath, V Pugazhendi, K C Palanisamy and S Surya Moorthi.

In his written responses, a few of which have been accessed by **TOI**, Palaniswami contended that petitioners were not party members and were seeking to agitate the internal affairs of the party, which either attained finality in civil courts or in respect of which the civil courts already passed orders. The representations ought to be rejected without any further consideration, he said.

The AIADMK general council amended the party's bylaws on July 11, 2022, exercising its vested authority. It expelled four members from the party for "extreme anti-party activities", Palaniswami said, without naming MLAs O Panneerselvam, R Vaithilingam, Paul Manoj Pandian and former MLA JCD Prabhakar. These resolutions were held valid, and the party held internal elections as per bylaws and as per the directions of the court and elected its general secretary.

The civil court restrained Panneerselvam from holding out as coordinator of the party, he added.

Palaniswami recalled EC recognising him as general secretary in April 2023, emphasizing no factual changes warranting the commission's interference. "Neither the present petitioner nor any of the other representations before the commission claim there has been a change in any position in the party," EPS said. Following the April 2023 communication, AIADMK contested the 2024 Lok Sabha elections using the two leaves symbol.

A March 2024 order of the civil court restrained Panneerselvam from using the symbol, a decision upheld by the high court's division bench and later the Supreme Court. AIADMK also held two general council meetings in 2023 and 2024.

The New Indian Express

Dated : 21-02-2025

# ECI has no jurisdiction over AIADMK internal affairs: EPS

EXPRESS NEWS SERVICE @Chennai

AIADMK general secretary Edappadi K Palaniswami has reiterated that the ECI has no jurisdiction over the internal affairs of the party and that the petitions filed by Ramkumar Adityan and others before the commission should be rejected without any consideration.

In his written response on behalf of the AIADMK, Palaniswami gave a detailed account of what had happened since 2017. Palaniswami also pointed out the petitioner has not claimed that the petitioner "is the party" or that any particular "group is the party" and therefore there is no question of granting any relief. He said the petitioner has only sought to re-agitate the issues that have become final by the Supreme Court and which are clearly covered by the matters as filed before the civil court and the same cannot be taken up by the commission.

"The commission, as rightly stated before the Madras High Court and in various other proceedings, does not have the jurisdiction to venture into the internal affairs of the political party. More so in the present case as the matters are squarely covered by the Orders of the Civil Coufts and pending proceedings before civil court," he added.

D.T. Next
Dated: 21.02.2025

# Omar seeks poll body's clarification

**JAMMU: Jammu and Kashmir Chief Minister Omar Abdullah on Thursday said the Election Commission should clarify its stand on reports that the US spent USD 21 million for "voter turnout in India".**

Talking to reporters on the sidelines of a function here, he vehemently opposed foreign interference in the country's democratic exercise.

"It (foreign interference) should not happen. So far, there is no proof of foreign interference... the Election Commission has to clarify whether foreign interference had taken place in our elections because to date we are of the belief that our elections were conducted in a free and fair manner," Abdullah said.

"It is up to America and it is their aid whom they want to give or not. Where is that decision ours?" the chief minister said.

The Hindu (Tamil)
Dated: 21.02.2025

# தேர்தல் ஆணையம் பலிகடாவா?

இந்திய தலைமை தேர்தல் ஆணையராக ஞானேஷ் குமார் பொறுப்பேற்றுக் கொண்டார். கடந்த 2022-ம் ஆண்டு மே மாதம் 15-ம் தேதி தலைமை தேர்தல் ஆணையராக நியமிக்கப்பட்ட ராஜீவ் குமார் கடந்த பிப்ரவரி 18-ம் தேதி வரை பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார். கடைசியாக அவர் அரசியல் கட்சிகளுக்கு ஒரு கருத்தை பதிவு செய்துவிட்டுதான் சென்றிருக்கிறார்.

"தேர்தல் நடைபெறும் போது ஒவ்வொரு படிநிலையிலும் ஏதாவது தவறு நேர்ந்தால் ஆட்சேபனை எழுப்பலாம். மேல்முறையீடு செய்யலாம். சந்தேகத்தை உருவாக்க முயற்சிப்பது விரும்பத்தகாத செயல். தேர்தல் முடிவு சாதகமாக இல்லை என்பதற்காக அதை ஏற்காத கட்சிகள், வேட்பாளர்கள் தேர்தல் ஆணைய அதிகாரிகள் மீது நியாயமற்ற முறையில் குற்றம் சாட்டுகின்றனர். இந்த விஷயத்தில் தேர்தல் ஆணையம் மிக வசதியாக பலிகடா ஆக்கப்படுகிறது" என்று தன் ஆதங்கத்தை விட்டு சென்றிருக்கிறார்.

தேர்தலில் தோற்றுப் போகும் கட்சி, குறிப்பாக ஆளும் கட்சி தோற்றுப் போனால் தேர்தல் ஆணையத்தை குறி வைப்பது வழக்கமாகி விட்டது. முதலில் மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களை குறை கூறுவது. ஏஐ தொழில்நுட்பத்துக்கு வந்து விட்ட நிலையிலும், பழைய வாக்குச் சீட்டு முறை பற்றி பேசுகின்றனர். ஆனால் தேர்தல் ஆணையம் அழைப்பு விடுத்தும் மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் மீதான குற்றச்சாட்டை நிரூபிக்க அரசியல் கட்சிகள் முன்வருவதில்லை.

மாநில தேர்தலோ அல்லது பொதுத் தேர்தலோ.... எத்தனை

தேர்தலில் வெற்றி தோல்வி என்பது அந்தந்த கட்சிகளின் செயல்பாடுகளைப் பொறுத்தது என்பதை உணரவேண்டும்.

தொகுதிகள், ஒவ்வொரு தொகுதியிலும் மாறுபடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை, அதற்கேற்ப வாக்குச் சாவடிகள், எத்தனை வாக்குப் பதிவு இயந்திரங்கள், ஒரு வாக்குச் சாவடியில் எத்தனை வாக்காளர்கள், அவர்களில் வாக்களித்தவர்கள் எத்தனை பேர்... இவ்வளவு விஷயங்களையும் துல்லியமாக கணக்கிட்டு வாக்குப் பதிவு இயந்திரங்களை ஹேக் செய்து ஒரு கட்சிக்கு சாதகமாக மாற்ற முடியுமா? இவை எல்லாம் நடைமுறை சாத்தியமா? யாரும் நினைத்துப் பார்ப்பதில்லை. ஆனால், தோல்விக்கு மட்டும் மின்னணு இயந்திரங்கள் காரணம்?

அடுத்து, ஆளும் கட்சிக்கு ஆதரவாக தேர்தல் ஆணையம் செயல்படுகிறது என்ற குற்றச்சாட்டு. தேர்தல் நடத்தை விதி முறைகள் அமலில் இருக்கும் போது அனைத்துக் கட்சிகளுமே விதிமீறலில் ஈடுபடுகின்றன. ஒரு தன்னாட்சி அதிகாரம் கொண்ட அமைப்பு, தேர்தலில் கவனம் செலுத்த வேண்டுமா? அல்லது அரசியல் கட்சிகளின் லாவணியை விசாரித்து எது சரி. எது தவறு என்று தீர்ப்பு சொல்ல வேண்டுமா?

உலகின் மிகப்பெரிய ஜனநாயக திருவிழாவான இந்திய தேர்தலில் பிரச்சாரத்தை கண்காணிப்பது, பணம் பட்டுவாடாவை தடுப்பது, வன்முறை, வாக்குச் சாவடி கைப்பற்றலை தடுப்பது, வாக்கு சதவீதத்தை அதிகரிப்பதில் கவனம் செலுத்துவது என ஏகப்பட்ட பணிகள் குவிந்து கிடக்கின்றன. அவற்றில் கவனம் செலுத்த தேர்தல் ஆணையத்துக்கு வழிவிட வேண்டும். தேர்தலில் வெற்றி தோல்வி என்பது அந்தந்த கட்சிகளின் செயல்பாடுகளைப் பொறுத்தது என்பதை உணரவேண்டும்.

அதுவரை தற்போது தலைமை தேர்தல் ஆணையராக பதவியேற்றுள்ள ஞானேஷ் குமார் சொல்வது போல் "தேர்தல் ஆணையம் வாக்காளர்களுடன் அப்போதும் இருந்தது, இப்போதும் இருக்கிறது. எப்போதும் இருக்கும்" என்ற உறுதிமொழியை நம்புவதுதான் நல்லது.

- ஏஎல்பி

Daily Thanthi

Dated: 21.02.2025

வாக்கு சதவீதத்தை அதிகரிக்க ரூ.182 கோடி நிதியுதவி:

# இந்திய தேர்தலில் தலையிட ஜோ பைடன் நிர்வாகம் முயற்சி

## டிரம்ப் பரபரப்பு குற்றச்சாட்டு

வாஷிங்டன், பிப்.21-



இந்தியாவில் வாக்கு சதவீதத்தை அதிகரிக்க வழங்கப்பட்ட ரூ.182 கோடி நிதியுதவியின் மூலம் இந்திய தேர்தலில் தலையிட ஜோ பைடன் நிர்வாகம் முயற்சித்ததாக டிரம்ப் பரபரப்பு குற்றம் சாட்டினார்.

### இந்தியாவுக்கு ரூ.182 கோடி நிதியுதவி

அமெரிக்காவில் ஜனாதிபதி டிரம்ப் நிர்வாகத்தில் அரசாங்க செயல்திறன் துறை என்கிற புதிய துறை உருவாக்கப்பட்டுள்ளது. எலான் மஸ்க் தலைமையிலான இந்த துறை செலவினங்களை குறைப்பதாக கூறி பல்வேறு நாடுகளுக்கு வழங்கப்படும் நிதி உதவிகளை நிறுத்தி வருகிறது. அந்த வகையில் முந்தைய ஜோ பைடன் அரசால் இந்தியாவில் ஓட்டு சதவீதத்தை அதிகரிப்பதற்காக வழங்கப்பட்டு வந்த 21 மில்லியன் டாலர்கள் (சுமார் ரூ.182 கோடி) நிதியுதவியை நிறுத்துவதாக டிரம்ப் நிர்வாகம் கடந்த வாரம் அறிவித்தது.

இதற்கான நிர்வாக உத்தரவில் கையெழுத்திட்ட டிரம்ப், "இந்தியாவிடம் அதிகளவில் பணம் உள்ளது. நாங்கள் ஏன் அவர்களுக்கு 21 மில்லியன் டாலர் வழங்க வேண்டும்? " என கேள்வி எழுப்பினார். "உலகளவில் அதிகம் வரி வசூலிக்கும் நாடுகளில் ஒன்றான இந்தியாவுக்கு நாங்கள் ஏன் பணம் கொடுக்க வேண்டும்" என்றும் அவர் கேட்டார்.

### வேறு யாரையோ தேர்ந்தெடுக்க முயற்சி

இந்த நிலையில் ஓட்டு சதவீதத்தை அதிகரிக்க இந்தியாவுக்கு 21 மில்லியன் டாலர்களை ஒதுக்கும் ஜோ பைடன் நிர்வாகத்தின் முடிவு குறித்து டிரம்ப் மீண்டும் கேள்வி எழுப்பியுள்ளார். மேலும் இதன் மூலம் ஜோ பைடன் நிர்வாகம் இந்தியாவின் தேர்தல்களில் தலையிட முயற்சித்ததாகவும் அவர் குற்றம் சாட்டினார். இது குறித்து அவர் கூறியாதவது:-

இந்தியாவில் வாக்குப்பதிவை அதிகரிக்க 21 மில்லியன் டாலர்களை நாம் ஏன் செலவிட வேண்டும்?. இந்த நிதி இந்திய தேர்தல்களில் செல்வாக்கு செலுத்த பயன்படுத்தப்பட்டிருக்கலாம். அவர்கள் (ஜோ பைடன் நிர்வாகம்) இந்தியாவில் வேறு யாரையோ தேர்ந்தெடுக்க முயற்சித்தார்கள் என்று நினைக்கிறேன். இந்திய அரசாங்கத்திடம் நாம் சொல்ல வேண்டும். இது ஒரு முழுமையான திருப்புமுனையாகும்.

இந்தியத் தேர்தலுக்கு 21 மில்லியன் டாலர், வங்காளதேசத்தில் அரசியல் சூழலை வலுப்படுத்த 29 மில்லியன் டாலர் ஜோ பைடன் நிர்வாகத்தால் வழங்கப்பட்டது. ஆசியா நன்றாக இருக்கிறது, நாங்கள் அவர்களுக்கு பணம் கொடுக்கத் தேவையில்லை.

இவ்வாறு டிரம்ப் கூறினார்.

Daily Thanthi

Dated: 21-02-2025

## இரட்டை இலை விவகாரம்:

# தேர்தல் கமிஷனில் எடப்பாடி பழனிசாமி பதில் மனு

புதுடெல்லி, பிப்.21-

திண்டுக்கலைச் சேர்ந்த சூரியமூர்த்தி என்பவர் தொடர்ந்த இரட்டை இலை விவகாரம் தொடர்பான வழக்கில், தேர்தல் கமிஷன் விசாரணையை தொடரலாம் என சென்னை ஐகோர்ட்டு உத்தரவிட்டு உள்ளது. இந்தநிலையில் இந்திய தேர்தல் கமிஷனில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தரப்பில் ஒரு மனு கொடுக்கப்பட்டுள்ளது. அந்த மனுவில், சூரியமூர்த்தி அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர் இல்லை. தேர்தலில் வேறு கட்சியின் சார்பாக அ.தி.மு.க வேட்பாளரை எதிர்த்து போட்டியிட்டவர். அவருக்கு அ.தி.மு.க. உட்கட்சி விவகாரம் தொடர்பாக மனு அளிக்கவோ, வழக்கு தொடுக்கவோ எந்த உரிமையும் கிடையாது. உட்கட்சி விவகாரம் தொடர்பாக ஏதேனும் பிரச்சினை இருந்தால், அதுகுறித்து சிவில் கோர்ட்டில்தான் முறையிட வேண்டுமே தவிர, தேர்தல் கமிஷனில் முறையிட முடியாது. எனவே சூரியமூர்த்தி மனுக்களை நிராகரிக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டு உள்ளது.

Dinakaran

Dated: 21-02-2025

# உட்கட்சி விவகாரத்தில் தலையிட தேர்தல் ஆணையத்திற்கு அதிகாரம் இல்லை

## எடப்பாடி பழனிசாமி புதிய மனு

புதுடெல்லி,பிப்.21: உட்கட்சி விவகாரத்தில் தலையிட தேர்தல் ஆணையத்திற்கு அதிகாரம் இல்லை என்று, எடப்பாடி பழனிசாமி தேர்தல் ஆணையத்தில் விளக்க மனுவை தாக்கல் செய்துள்ளார்.

இரட்டை இலை மற்றும் பொதுச்செயலாளர் வழக்கு சம்பந்தமான தேர்தல் ஆணையம் விசாரிக்க விதிக்கப்பட்ட தடையை நீக்க கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் புகழேந்தி தொடர்ந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம், இரட்டை இலை சின்னம் மற்றும் அதிமுக ஆகிய உட்கட்சி விவகாரம் தொடர்பாக தேர்தல் ஆணையம் விசாரிக்க தடையில்லை என்று உத்தரவிட்டிருந்தது.

மேலும் இரட்டை இலை சின்னம், அதிமுக கட்சி, பொதுச்செயலாளர் ஆகிய விவகாரம் குறித்து சூர்யமூர்த்தி, புகழேந்தி, கே.சி.பழனிசாமி, ஓ.பி. ரவீந்தரநாத் ஆகியோர் இந்திய தலைமை தேர்தல் ஆணையத்தில் மனு தாக்கல் கொடுத்துள்ளது தற்போது வரையில் நிலுவையில் உள்ளது.



இந்த நிலையில் எடப்பாடி பழனிசாமி இந்திய தலைமை தேர்தல் ஆணையத்தில் ஒரு விளக்க மனுவை தாக்கல் செய்துள்ளார்.

அதில், "அதிமுக கட்சி தொடர்பாக சூர்யமூர்த்தி என்பவர் அந்த கட்சியை சார்ந்தவர் கிடையாது. மேலும் தேர்தலில் வேறு கட்சியின் சார்பாக அ.தி.மு.க வேட்பாளரையே எதிர்த்து போட்டியிட்டவர். எனவே அவர் அ.தி.மு.க உள்கட்சி விவகாரம் தொடர்பாக மனு அளிக்கவோ, வழக்கு தொடுக்கவோ எந்தவித முகாந்திரமும் கிடையாது. மேலும் அதிமுக கட்சியின் பொதுக்குழு கூட்டம், பொதுச்செயலாளரை தேர்வு செய்வது ஆகிய உட்கட்சி விவகாரம் குறித்து சூர்யமூர்த்தி எழுப்ப முடியாது. அவர் அதிமுக என்ற கட்சி மற்றும் அதன் விதிகளுக்கு எதிராக செயல்பட்டவர். குறிப்பாக உட்கட்சி விவகாரம் தொடர்பாக ஏதேனும் பிரச்சனை இருந்தால், அதுகுறித்து நீதிமன்றத்தில் தான் முறையிட முடியும். அதாவது உட்கட்சி விவகாரத்தில் தலையிட அதிகாரம் இல்லாத தேர்தல் ஆணையத்திடம் அவர் முறையிட முடியாது. மேலும் உட்கட்சி விவகாரங்களில் தலையிட தேர்தல் ஆணையத்துக்கும் அதிகாரம் இல்லை. இந்த விவகாரம் தேர்தல் ஆணைய விசாரணை வரம்புக்குள்ளும் வராது. எனவே சூர்யமூர்த்தியின் மனுக்களை மேற்கொண்டு எந்தவித விசாரணையும் நடத்தாமல் உடனடியாக நிராகரிக்க வேண்டும். இவ்வாறு தெரிவித்துள்ளார்.

Dinakaran

Dated: 21.02.2025

வாக்கு சதவீதத்தை அதிகரிக்க பணம்

# இந்தியாவில் யாரை ஆட்சியில் அமர்த்த நிதி ஒதுக்கப்பட்டது?

## அமெரிக்க அதிபர் டிரம்ப் கேள்வி

நியூயார்க்,பிப்.21: இந்தியாவில் வாக்குசதவீதத்தை அதிகரிக்க ரூ.181 கோடி நிதி ஒதுக்கீடு விவகாரத்தில் யாரை ஆட்சியில் அமர்த்த நிதி ஒதுக்கப்பட்டது என்ற கேள்வியை அமெரிக்க அதிபர் டிரம்ப் எழுப்பியுள்ளார்.

அமெரிக்க அதிபர் டிரம்ப் பதவியேற்ற பிறகு யுஎஸ்எய்டு அமைப்பு கலைக்கப்பட்டது. இதை எலான் மஸ் தலைமையிலான அரசாங்க செயல்திறன் துறையின் அறிவுறுத்தல் பேரில் டிரம்ப் கலைத்து உத்தரவிட்டார். இந்த சூழலில் யுஎஸ்எய்டு அமைப்பு சார்பில் இந்தியாவில் வாக்குசதவீதத்தை அதிகரிக்க ரூ.181 கோடி நிதி ஒதுக்கப்பட்டு இருப்பது தெரிய வந்தது. அதை அமெரிக்கா ரத்து செய்துள்ளது. இந்த விவகாரம் தொடர்பாக நேற்று அதிபர் டிரம்ப் கூறுகையில்,'இந்தியாவில் வாக்குசதவீதத்தை அதிகரிக்க அமெரிக்கா எதற்காக ரூ.181 கோடி நிதியை ஒதுக்க வேண்டும். அவர்கள் அமெரிக்காவுக்கு வரிமேல் வரி போட்டு அதிக பணம் வைத்துள்ளனர். அப்படி இருக்கும் போது பைடன் நிர்வாகம் எதற்காக ரூ.181 கோடிநிதி ஒதுக்கியது?. ஒரு வேளை அவர்கள் இந்தியாவில் வேறு யாரையாவது தேர்ந்தெடுக்க முயற்சித்து இருக்கிறார்கள் என்று நான் சந்தேகப்படுகிறேன். இதை நாம் உடனே இந்திய அரசிடம் தெரிவிக்க வேண்டும். இந்தியத் தேர்தலுக்கு ரூ.181 கோடி, வங்கதேச அரசியலை வலுப்படுத்த ரூ.251 கோடி என்று வாரி வழங்கி இருக்கிறார்கள். ஆசியா நன்றாக இருக்கிறது. நமது மக்களின் வரிப்பணத்தை, நாம் அவர்களுக்கு கொடுக்க வேண்டியதில்லை. இவை ஒன்றிரண்டு மட்டுமே அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் பட்டியல் மிக நீளமானது' என்றார்.

### வெளிநாட்டு ஏஜென்சிகளின் கருவி ராகுல் காந்தி: பா.ஜ குற்றச்சாட்டு

இந்தியாவில் ஓட்டு சதவீதத்தை அதிகரிக்க பைடன் நிர்வாகம் ரூ.181 கோடி நிதி ஒதுக்கீடு செய்த விவகாரம் குறித்து டிரம்ப் கேள்வி எழுப்பியது பற்றி பா.ஜ தகவல் தொழில்நுட்பத்துறை தலைவர் அமித் மாளவியா கூறுகையில்,' 2024 மக்களவைத் தேர்தல் பிரச்சாரத்தின் போது, வெளிநாட்டு சக்திகள் தன்னை ஆட்சிக்கு வரவிடாமல் தடுக்க முயல்கின்றன என்று பிரதமர் மோடி கூறியதை மீண்டும் உறுதிப்படுத்துவது போல் அமெரிக்க அதிபர் டிரம்ப் கருத்து உள்ளது. ராகுல் காந்தி இந்தியாவின் அரசியல் நலன்களை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் உலகளாவிய நெட்வொர்க்குகளுடன் தன்னை இணைத்துக் கொண்டு, வெளிநாட்டு நிறுவனங்களுக்கு ஒரு கருவியாக செயல்படுகிறார். இப்போது அமெரிக்க அதிபர் டிரம்ப், இந்தியத் தேர்தலில் செல்வாக்கு செலுத்தி, பிரதமர் மோடியைத் தவிர வேறு ஒருவரை பதவியில் அமர்த்த முயற்சி நடந்ததை உறுதி செய்துள்ளார்' என்றார்.

Dinamani

Dated: 21.02.2025

## அதிமுக உள்கட்சி விவகாரம்

# தேர்தல் ஆணையத்தில் எடப்பாடி பழனிசாமி பதில் மனு

நமது சிறப்பு நிருபர்

**புது தில்லி, பிப். 20:** அதிமுக உள்கட்சி விவகாரம் தொடர்பாக வெளிநபர்கள் மனு அளிக்கவோ, வழக்குத் தொடரவோ உரிமை இல்லையென தேர்தல் ஆணையத்தில் அதிமுக பொதுச் செயலர் எடப்பாடி கே. பழனிசாமி பதில் மனு தாக்கல் செய்துள்ளார்.

அதிமுக விவகாரம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றத்தில் திண்டுக்கல்லைச் சேர்ந்த சூர்ய மூர்த்தி என்பவர் மனு தாக்கல் செய்துள்ளார். எடப்பாடி பழனிசாமி தரப்புக்கு எதிராக தேர்தல் ஆணையத்திலும் மனு அளித்துள்ளார். அதில், அதிமுக உள்கட்சி விவகாரத்தில் கட்சியின் சட்டவிதிகளுக்கு எதிராக எடப்பாடி பழனிசாமி செயல்படுவதாகக் கூறி, அவர் தரப்புக்கு ஒதுக்கப்பட்ட இரட்டை இலைச் சின்னத்தை முடக்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளார். இந்த மனுவை தேர்தல் ஆணையம் அடுத்த மாதம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளும் எனத் தெரிகிறது.



இந்நிலையில், சூரிய மூர்த்தி மனுவுக்கு பதிலளிக்கும் வகையில் எடப்பாடி கே. பழனிசாமி ஒரு மனுவை தேர்தல் ஆணையத்தில் தாக்கல் செய்துள்ளார்.

அதில், சூர்யமூர்த்தி அதிமுகவை சேர்ந்தவர் அல்லர். ஒரு தேர்தலில் அதிமுக சார்பாக நிறுத்தப்பட்ட வேட்பாளரை எதிர்த்துப் போட்டியிட்டவர். இவரைப் போன்றோர் அதிமுக உள்கட்சி விவகாரம் தொடர்பாக மனு அளிக்கவோ அல்லது வழக்குத் தொடரவோ உரிமை இல்லை.

அதிமுக பொதுக்குழு, பொதுச் செயலர் தேர்வு உள்ளிட்ட உள்கட்சி விவகாரம் குறித்து சூர்ய மூர்த்தி போன்றவர்களால் கேள்வி எழுப்ப முடியாது. அதிமுகவுக்கு விரோதமானவர் சூர்யமூர்த்தி. இவரைப் போன்றவர்கள் தேர்தல் ஆணையத்தை அணுக முடியாது.

மேலும், உள்கட்சி விவகாரம் தொடர்பான பிரச்னைகளுக்கு சிவில் நீதிமன்றத்தில்தான் வாதங்களை எடுத்துவைக்க முடியும். இதில், தேர்தல் ஆணையத்துக்கு அதிகாரம் இல்லை என்பதால் இந்த விவகாரம் ஆணைய விசாரணை வரம்புக்குள் வராது. இதனால், தேர்தல் ஆணையத்திடம் முறையிட முடியாது. சூர்யமூர்த்தியின் மனுக்களை மேற்கொண்டு எந்த விசாரணையும் இன்றி நிராகரிக்க வேண்டும் என அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

Dinamani

Dated: 21-02-2025

# குடியரசுத் தலைவருடன் புதிய தலைமைத் தேர்தல் ஆணையர் சந்திப்பு



குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவை அவரது மாளிகையில் வியாழக்கிழமை சந்தித்த தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார்.

புது தில்லி, பிப். 20: இந்திய தேர்தல் ஆணையத்தின் புதிய தலைமைத் தேர்தல் ஆணையராக பொறுப்பேற்றுள்ள ஞானேஷ் குமார், குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் ஜகதீப் தன்கர் ஆகியோரை வியாழக்கிழமை சந்தித்தார்.

கடந்த 2024-ஆம் ஆண்டு, மார்ச் மாதம் முதல் தேர்தல் ஆணையர்களில் ஒருவராக இருந்த ஞானேஷ் குமார், பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான தேர்வுக் குழுவால் புதிய தலைமைத் தேர்தல் ஆணையராக கடந்த திங்கள்கிழமை தேர்வு செய்யப்பட்டார்.

இதையடுத்து, நாட்டின் 26-ஆவது தலைமைத் தேர்தல் ஆணையராக ஞானேஷ்குமார் புதன்கிழமை பதவியேற்றார்.

இந்நிலையில், குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவை அவரது மாளிகையில் வியாழக்கிழமை மரியாதை நிமித்தமாக சந்தித்தார்.

குடியரசு துணைத் தலைவர் ஜகதீப் தன்கரையும் ஞானேஷ் குமார் வியாழக்கிழமை சந்தித்தார்.